அசல் வழக்கு எண். 58/2020 வா.சா.1 நீலகண்டன் த/பெ பூபதி

**05.10.2023 - 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் 1997 லிருந்து 1999 வரையில் 6 லிருந்து 8ம் வகுப்பு வரை ஆரணி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் படித்தேன் என்றால் சரியல்ல. நான் படிக்கவே இல்லை. நான் சொல்வது பொய் என்றும் நான் படித்த பள்ளியிலிருந்து ஆவணங்கள் வரவழைக்கப்பட்டால் நான் படித்த விவரம் தெரிய வரும் என்றால் நான் படிக்கவே இல்லை விவசாயம் செய்து வந்தேன ஆடு மேய்த்து வந்தேன்.

2. 4ம் பிரதிவாதி என் தாய் மாமன் என்றால் சரி. 5ம் பிரதிவாதி இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியான என் சகோதரியின் கணவர் என்றால் சரிதான். 16.05.2023 தேதியிட்ட வா.சா-ஆ.1 கிரய பத்திரத்தின் முன்னிலைக்கு என் அப்பா வழக்கு சொத்தினை ஆதிமூலம் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் கிரயம் வாங்கியது உண்மைதான் ஆனால் கூட்டு குடும்பமாக தான் அந்த கிரயம் வாங்கப்பட்டது. வாசா.ஆ,.1 கிரய பத்திரத்தில் என் அப்பா பெயரில் கிரயம் வாங்கியதாக தான் உள்ளது என்றும், நான் சொல்வதுபோல் கூட்டு குடும்ப கிரயமாக வாங்கியதாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் வீட்டில் என் அப்பா மூத்தவர் என்பதால் அவரது பெயரில் அந்த கிரயம் வாங்கப்பட்டது ஆனால் அது கூட்டுக் குடும்ப கிரயம் தான்.

3. என் தகப்பனாரான 1ம் பிரதிவாதி தனது குடும்ப செலவிற்காகவும் தனிப்பட்ட கடன்களுக்காவும் வா.சா.ஆ.3 02.03.2007 தேதியிட்ட கிரய பத்திரம் முன்னிலைக்கு 4ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் திருமணம் செய்துக்கொண்டு தனியாக சென்றுவிட்டேன். நான் வீட்டைவிட்டு தனியாக சென்ற சமயத்தில் இவ்வாறு கிரயம் கொடுக்கப்பட்டது. நான்சொல்வது பொய்என்றும் வா.சா. ஆ.,3 கிரய பத்திரம் குறித்த எல்லா விவரமும்எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

4. 4ம் பிரதிவாதி அதன்பின்னர் 5ம் பிரதிவாதிக்கு 28.11.2007 தேதியிட்ட வா.சா.ஆ.4 கிரய பத்திரம் முன்னிலைக்கு கிரயம் கொடுத்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 4ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி உறவினர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்குள் சொத்தினை கைமாற்றி கொண்டார்கள்.

5. 5ம் பிரதிவாதி கிரயம் பெற்ற தேதியிலிருந்து பட்டாபெயர் மாற்றம் செய்து வழக்கு சொத்தினை தனது தனிப்பட்ட அனுபவத்தில் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பாவின் பிள்ளைகளான எனக்கும் 2 மகள்களுக்கும் தெரியாமல் 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தங்களுக்குள் இவ்வாறு சொத்து மாற்றம் செய்துகொண்டார்கள்.

6. 5ம் பிரதிவாதி தனது பெயரில் உள்ள சொத்தினை 6ம் பிரதிவாதியிடம் அடமானம் போட்டு அடமானத் தொகையை இன்று வரை 5ம் பிரதிவாதிதான்செலுத்தி வருகிறார் என்றால் கூட்டுக்குடும்ப சொத்தினை எவ்வாறு ஒரு தனிபட்ட்ட நபர் மற்றவர்களுக்கு தெரியாமல் அடமானம் போட முடியும்.

7.நானும் என்அப்பாவும் ஆகாரம் கிராமத்தில் தான் வசித்து வருகிறோம் என்றால் 2007ம் ஆண்டு எனக்குதிருமணம் ஆன பிறகு நான் வேறு ஊருக்கு வந்துவிட்டேன் அதன் பின்னர் ஆகாரம் கிராமத்திற்கு போக வர உள்ளேன் என்அப்பா ஆகாரம் கிராமத்தில் தான் வசித்து வருகிறார். என்அப்பா தனது இரு மகள்கள் மற்றும் மருகமகன்களுடன் கூட்டாக வசித்து வருகிறார். நான்மட்டும் தனியாக வசித்து வருகிறேன்.

8. 5ம் பிரதிவாதி தான் அம்மாவையும் அப்பாவையும் கவனித்து வருகிறார் என்று சொன்னால் அதற்காக தான் நிலத்தில் வரும் வருமானத்தை அவர் வைத்துள்ளார் அதற்காக சொத்தினை எவ்வாறு பெயர் மாற்றம் செய்ய முடியும். எனக்கு மஞ்சள்காமாலை வந்தபோது 5ம் பிரதிவாதி தான் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள சிபா மருத்துவமனையில் என்னை சேர்த்து சிகிக்சை அளிக்க வைத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் மருத்துவ செலவை நான் 5ம் பிரதிவாதிக்கு திரும்ப செலுத்தவில்லை என்று சொன்னால் நான் சிகிச்சையை எடுத்து கொள்ளாத போது எதற்காக பணத்தை திரும்ப கொடுக்க வேண்டும்.

9. 5ம் பிரதிவாதி தான் என் அம்மாவிற்கு செய்த 2 அறுவை சிகிச்சை செலவு செய்தார் என்று சொன்னால் சரிதான் எங்கள் நிலங்களில் வரும் வருமானத்தை 5ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் எனும்போது அவர்தானே என் அம்மாவிற்கு செலவு செய்ய வேண்டும் . நான் என் அப்பா அம்மாவை கவனிக்காமல் என் மனைவியுடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய செய்கையினால் தான் எனது சகோதரியான 3ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகாமல் வீட்டிலேயே உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வீட்டில் உள்ள மருமகன் தான் வரும் மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்கிறார்.

10. 5ம் பிரதிவாதி தான் வழக்கு சொத்தை தொடர்ந்து 16 ஆண்டுகளாக தன்னுடைய தனிப்பட்ட சொத்தாக எனக்கு தெரிந்தே அனுபவித்து வருகிறார் என்றும் அதனால் எனக்கு வழக்கு சொத்தில் எந்தவிதமான உரிமையோ அல்லது பாத்தியதையோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2007ல் நான் வீட்டை வெளியில்சென்றபிறகு அவ்வாறு செய்யப்பட்டு விட்டது. மூதாதையர் சொத்தை விற்று தான் வழக்கு சொத்து கிரயம் வாங்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் தாவாச் சொத்தை கூட்டாக அனுபவித்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

11. நான் என் தாவாவில் 12 வருடங்களுக்கு முன்பு காதல்திருமணம்செய்துக்காண்டு வீட்டை விட்டு வெளியில் சென்றுவிட்டதாக சொல்லி உள்ளேன் என்றும் அதனால் நான் வழக்க சொத்தை கூட்டு அனுபவத்தில் இருந்ததாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல- நான் 2007ல்தான் வீட்டை விட்டு வெளியே வந்தேன். வழக்கு சொத்து 5ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அந்த சொத்தில் நான் பாகம் கோர முடியாதுஎன்று சொன்னால சரியல் அதுஎன் அப்பாவின் சொத்தாகும். தாவாவில் சொல்லப்பட்ட சங்கதிகள் கற்பனையானவை என்றால் சரியல்ல. 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளை அலைகழிக்கவேண்டும் என்பதற்காக இந்த பொய் வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் 4,5 பிரதிவாதிகளின் நட்டயீட்டு தொகையுடன் இந்த வழக்கைசெலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.